முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | L.A.O.P | 189 | of | 2024 |

2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 05 –ம் நாளான இன்று

கோருரிமைதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.Logeshwari, Translator, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சுமித்ரா |
| தந்தை பெயர் | செல்வராஜ் |
| பதவியின் பெயர் | சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நில ஆர்ஜித அலுவலர்) |
| | |
| வயது | 47 |

நாள் 05.06.2026 – கோ.ம.சா.1 (RW1)

முதல் விசாரணை

நான் எனது தரப்பில் முதல் விசாரணக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.ஆவணங்கள் தாக்கல் எதுவும் இல்லை.

குறுக்கு விசாரணை

சென்னை கன்னியாகுமரி தொழில்தட சாலை விரிவாக்க திட்டத்திற்காக இந்த வழக்கின் நிலங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த திட்டத்திற்கான நில ஆர்ஜித அதிகாரி தான் ஒன்றாவது எதிர்மனுதாரர் அவர் என் கீழ் நான் பணிபுரிகிறேன் என்றால் சரிதான். அவரின் சார்பாக நான் சாட்சி மொழிகிறேன் என்றால் சரிதான். வழக்கிற்கான நிலங்களுக்கு இழப்பீடு தொகை வழங்கும் போது 2016-2019 காலத்திற்கான விலை நிர்ணய பட்டியலை சார்பதிவாளர் இடம் பெற்று அதன் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் புதிய நில எடுப்பு சட்டம் 2013 இன் படி 1.6 கிலோமீட்டர் சுற்றளவிற்கு விற்பனை புள்ளி விவரங்களை கருத்தில் கொண்டு அதன் தரவுகளை ஒப்பிட்டு அதிகமாக உள்ள பதிவுகளின் சராசரி மதிப்பீடை கணக்கில் கொண்ட நிர்ணயம் செய்யப்பட்டது. அவர் எடுக்கும் போது அதில் ஊத்துக்காடு அ , வாலாஜாபாத் , கட்டவாக்கம் , நத்தாநல்லூர் மற்றும் வல்லப்பாக்கம் ஆகிய கிராமங்கள் மேற்படி 1.6 கிலோ மீட்டர் சுற்றளவில் வரும் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் மொத்தம் 1551 கிரைய பத்திரங்களின் விவரங்களை நாங்கள் கணக்கில் கொண்டோம் என்றால் சரிதான். காஞ்சிபுரம் செங்கல்பட்டு சாலை உடைய வழிகாட்டு மதிப்பீடை எடுத்து அதை ஆவணமாக

தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் தவறாக சொல்கிறேன் என்றும் சர்வே எண்களுக்கான வழிகாட்டு மதிப்பீடு தான் செய்துள்ளேன் என்றும் சாலைக்காண வழிகாட்டு மதிப்பு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கையகப்படுத்தப்பட்ட இதே திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நாலு வகையான விலைமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 741.33,827.80,1241.70,4413.24 என நான்கு வகையான மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு செய்யப்பட்டது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நாங்கள் கணக்கில் எடுத்துக்கொண்ட 1551 ஆவணங்களிலேயே சதுர அடி ஒன்றுக்கு ரூபாய் 900 மற்றும் ஆயிரம் என்ற மதிப்பில் உள்ள 50–100 ஆவணங்கள் இருந்த போதிலும் அதை எடுத்துக் கொள்ளாமல் குறைந்த மதிப்பீட்டை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக மதிப்பீடு நிர்ணயம் செய்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. சட்டப்படிதான் இழப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கோமா சா ஆ 2 முதல் 15 வரை வரையிலான ஆவணங்கள் அனைத்தும் மேற்படி 1.6 கிலோமீட்டர் பரப்பளவிற்க உட்பட்ட ஆவணங்கள் என்றும் ஆவணங்களை இழப்பீடு நிர்ணயம் செய்யும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் நாங்கள் விதிகளின்படி இழப்பீடு நிர்ணயம் செய்தோம். ஊத்துக்காடு என்பது

மிகவும் வளர்ச்சி அடைந்த இடம் என்றும் ஸ்ரீபெரும்புதூர் முதல் செங்கல்பட்டு செய்யும் செல்லும் சாலை காஞ்சிபுரம் முதல் சென்னை செல்லும் சாலை மற்றும் வாலாஜா முதல் சென்னை செல்லும் சாலை ஆகியவை ஊத்துக்காடு கிராமத்தின் அருகில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் கல்லூரி மற்றும் கட்டிடங்கள் அதிகமாக உள்ளது என்றால் சரியல்ல. ஊத்துக்காட்டை சுற்றி ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் வல்லம் சிப்காட் மற்றும் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் நில ஆர்ஜித இடங்களில் இருந்து இரண்டு முதல் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நில ஆர்ஜித சட்டத்தின்படி நாங்கள் சேகரித்த ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் இயந்திரத்தனமாக செயல்பட்டு இழப்பீடு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் நாங்கள் நிர்ணயம் செய்த இழப்பீடு சட்டப்படி செல்ல தகுதி அல்ல என்றும், ஒரு சதுர அடிக்கு ரூபாய் 3000 இழப்பீடாக நாங்கள் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும் கோரிக்கை மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.